மலேசியத் தமிழர்

உலகத் தமிழ்ப் பண்பாட்டு இயக்க முதல் மாநாடு

ஆய்வுக் கட்டுரை :

1977 டிசம்பர் 16, 17, 18ஆம் நாட்களில் சென்னையில்
நடைபெற்ற உலகத் தமிழர் பண்பாட்டு மாநாட்டில்
மலேசியப் பேராளர் குழுவின் தலைவர் கவிஞர்
முரசு. நெடுமாறன், அவர்களால் படிக்கப்
பட்ட ஆய்வுக் கட்டுரை.

250849

ஸ்ரீமதி பிரிண்டர்ஸ், சென்னை–600 002

மலேசியத் தமிழர்

1977 டிசம்பர் 16, 17, 18-ஆம் நாட்களில் சென்னையில் நடைபெற்ற உலகத் தமிழர் பண்பாட்டு மாநாட்டில் மலேசியப் பேராளர் குழுவின் தலைவர் கவிஞர் திரு முரசு. நெடுமாறன் அவர்களால் படிக்கப்பட்ட ஆய்வுக் கட்டுரை.

முன்னுரை:

உலகம் முழுதும் வாழும் தமிழர்களின் பேராளர்கள் ஒன்று கூடி ஒவ்வொரு நாட்டுத் தமிழர்களைப் பற்றிய உண்மை நிலைகளை ஆராயும் இம்மாநாட்டில், மலேசியத் தமிழர்களைப் பற்றிய ஓர் ஆய்வுக் கட்டுரையைப் படைப்பதில் பெருமைப்படுகிறேன்; பெருமிதம் அடைகிறேன். பெருமகிழ்ச்சியடைகிறேன்.

உலகில் முதலில் தோன்றிய இனமென்றும் உலகிற்கெல்லாம் நாகரிகத்தையும் பண்பாட்டையும் வழங்கிய இனமென்றும் பெருமை பெற்றிருந்தாலும் இன்றைய நிலையை நோக்கும் போது மனவருத்தமே ஏற்படுகிறது. சூழ்நிலைகளின் காரணமாகப் பலப்பல நாடுகளில் குடியேறி அந்தந்த நாட்டின் குடிமக்களாகிய தமிழர்கள் வாழ்ந்தாலும் அவர்களின் பொதுவான பண்பாட்டு உணர்வுகளை மறந்துவிடாமல் காக்க உலகத் தமிழ்ப் பண்பாட்டு இயக்கம் வழி கோலுகிறது. முதன் முறையாக உலகளாவிய முறையில் மாநாடு கூட்டும் உலகத் தமிழ்ப் பண்பாட்டு இயக்கத்திற்கு வாழ்த்துக்கூறி மலேசியத் தமிழர்கள் பற்றிய என் கட்டுரையை இவ்வரங்கில் படைக்கின்றேன்.

வரலாற்றுப் பின்னணி :

மலேசியாவுக்கும், தமிழ் இனத்திற்கும் நீண்ட நெடுங்காலத் தொடர்புண்டு. 11-ஆம் நூற்றுண்டின் முற்பகுதியில் இராசேந்திர சோழன் கடாரத்தின் மேல் படையெடுத்து வென்ற காலத்தில் முன்பிருந்தே வாணிகத் தொடர்பு இருந்து வந்துள்ளது. அன்று 'கடாரம்' என்று வழங்கிய பெயர்தான் இன்று 'கெடா' என்று மருவி வழங்குகிறது. இடப்பெயர்கள் மட்டுமின்றி 'ராஜா சூலான்' முதலிய மலாய் மன்னர்களின் பெயர்களும் தமிழர் தொடர்பை உணர்த்தி நிற்கின்றன. மேலும், மலாய்க்காரர்களின் திருமணம் போன்ற சடங்குகளிலும் முடிசூட்டு விழா போன்ற அரச நிகழ்ச்சிகளிலும் தமிழ்ப் பண்பாட்டுக்

கூறுகள் விளங்குவதை இன்றும் காணலாம், மலாய் மொழியில் விளங்கும் கப்பல், கடை, காவல், குறிஞ்சி, மூக்கா (முகம்) முதலிய ஆயிரக்கணக்கான தமிழ்ச் சொற்கள் நீண்ட நெடுந்தொடர்பை எடுத்தியம்புகின்றன. மலாய்க்காரர்கள் இசை, நடனம் போன்ற கலைத்துறைகளிலும் தமிழின் சாயலைக் காணலாம். ''மலேசியாவின் விடுதலைத் தந்தை'' யான துங்கு அப்துல் ரகுமான் புத்ரா அவர்களைச் சோழப்பரம்பரை யென்று மலேசியத் தமிழர்களின் மூத்தத் தலைவர் துன் சம்பந்தன் அவர்கள் குறிப்பிடுவது வழக்கம்.

இராசேந்திர சோழன் காலந் தொட்டு வாணிகத்தை நாடி வந்த தமிழர்கள், மலேசியாவிலேயே தங்கி வாழவும் முற்பட்டனர் மலாய்ப் பெண்களை மணந்து நிலையாகத் தங்கினார்கள் இவர்கள் காலப் போக்கில், தாய் மொழியை மறந்தார்கள், பழக்க வழக்கம், வழிபாடு முதலியவற்றால் மட்டும் தமிழர்களாக விளங்கும் இவர்கள் மொழியால் மட்டும் மாறுபடுகிறார்கள். மலாக்காவில் வாழும் இம்மலாய்த் தமிழர்கள் 'மலாக்கா செட்டிகள்' ஆவார்கள். மொழியை மறந்துவிட்டால் இனத்தின் நிலை என்னாகும் என்பதற்கு இவர்கள் ஓர் எடுத்துக் காட்டு.

சஞ்சிக் கூலிகள்:

18-ஆம் நூற்றாண்டில் வெள்ளைக்காரர்களின் காலனித்துவ ஆட்சியில் தமிழர்கள் பெரும் அளவில் குடியேற்றப்பட்டனர். 1938–ஆம் ஆண்டில் குடியேற்றக் கட்டுப் பாட்டுச் சட்டம் உருவாகும் வரை இலட்சக்கணக்கானவர்கள் மலேசியாவில் குடியேற்றப்பட்டார்கள். இப்படிக் குடியேற்றப்பட்டவர்களைச் 'சஞ்சிக் கூலிகள்' என இகழ்ச்சியாகக் குறிப்பிட்டனர். இன்று விடுதலை பெற்ற உரிமை மிக்கக் குடிமக்களான பின்னரும் 'சஞ்சிக் கூலிகள்' அதாவது 'ஒப்பந்தத் தொழிலாளிகள்' என்ற அடைமொழியைச் சிலர் மறக்காமலிருப்பது மனத்திற்கு வருத்தத்தை ஏற்படுத்துகிறது.

காலனித்துவ ஆட்சியில் மலேசியத் தமிழர்களின் வாழ்வு பெரும்பாலும் ரப்பர்த் தோட்டங்களிலேயே உழன்றது. ஒரு நாளைக்குப் பத்துக்காசு சம்பளத்தில் குருதியை வியர்வையாக்கினர் தமிழர். வளமான சாலைகளை அமைக்கத் தமிழ்மக்கள் சிந்திய உழைப்புக்கு அளவே இல்லை. மலேசியாவின் வளத்திற்குத் தமிழ் மக்கள் ஆற்றிய பணிகளை வரலாறு மறைக்க முடியாது.

''வயிரங்கள் ஆங்கே விளையாடும் கருவிகளாம்;
வயிரென்ற ஒன்றை மறந்தவர்கள் வாழிடமாம்''
பஞ்ச மெனும்ஒரு வாவிக்கங் கிடமில்லை;

கொஞ்சம் மிகைப்படுத்திக் கூறிடவே வேண்டுமென்ருல்
வாழக் கொடுத்துவைத்தோர் வாழ்கின்ற சீமையதாம்.'

என்று மலேசியாவின் செல்வ வளத்தைப் பாடிய கவிவாணர் ஐ. உலகநாதன்.

''பாழுக்கு மரமெதற்குப் பார்க்கலாம் அங்கு வந்தால்
பாலுக்கு மரமிருக்கும் பாங்கான காட்சிகளை!
பாலென்ரு சொன்னேன்? பாலில்லை அம்மரங்கள்
பட்டையினைச் சீவிவிட்டால் கொட்டுவது தமிழ்க்குருதி''.

என்று தமிழர் நிலைக்கு இரங்கிக் கண்ணீர் வடிக்கிருர்.

இருண்டகாலம்

காலனித்துவ ஆட்சியை முறியடித்து 1940-இல் ஜப்பானியர் மலாயாவைக் கைப்பற்றினர். 1945 வரை அவர்களின் கொடுங் கோல் ஆட்சி நடந்தது. அக்கால கட்டத்தில் மக்கள் ஏற்ற துன்பங் களை எழுத்தில் வடிக்க இயலாது. ''மரண ரயில் பாதை'' என்று வருணிக்கப்படும் தாய்லாந்திற்கும் பர்மாவிற்கும் இடையிலான புகை வண்டிப்பாதை அமைப்பிற்குத் தமிழர் சிந்திய செந்நீரை நினைக்க நினைக்க நெஞ்சம் உருகும்; கண்ணீர் பெருகும். ஜப்பானியரின் கொடுங்கோல் ஆட்சி நடந்த இந்தக் கால கட்டத்தை வரலாற்ருசிரி யர்கள் இருண்ட காலம் என்பார்கள். ஜப்பானியர்களின் ஆட்சி 1945-ஆம் ஆண்டோடு ஒரு முடிவுக்கு வர மீண்டும் வெள்ளையர் ஆட்சிப் பொறுப்பை ஏற்றனர்.

இளஞாயிறு எழுந்தது

மலேசிய வரலாற்றில் இளஞாயிறு எழுந்த காலம் 1946-ஆம் ஆண்டாகும். இந்த ஆண்டில்தான் சமுதாய உணர்வும் ஒன்றித்துச் செயல்பட வேண்டுமென்ற ஒருமைப்பாட்டுணர்வும் கலைப் பண்பாடு களைப் பேண வேண்டுமென்ற முற்போக்குணர்வும் மலேசிய மக்களி டையே ஏற்படத் தொடங்கின. இன்று நாட்டை ஆளும் தேசிய முன்னணியின் முதன்மை வாய்ந்த கட்சிகளான அம்னே (United Malay National Organisation (UMNO), மலேசிய சீனர் சங்கம், மலேசிய இந்தியர் காங்கிரசு ஆகிய அரசியல் கட்சிகள் 1946-ஆம் ஆண்டில் தான் தோன்றின. ஜான் எ. திவி அவர்கள் மலேசிய இந்திய காங்கிரசுவின் முதல் தலைவர் என்பது இங்குக் குறிப்பிடத் தக்கது. பாட்டாளித் தோழர்களுக்கு வழி காட்டவும், பாதுகாப்பு நல்கவும் தொழிற்சங்க அமைப்பும் 1946-இல் தான் ஏற்பட்டது. இன, மொழி, கலை பண்பாட்டு உணர்வுகளை வளர்க்க மலேசியத் திராவிடர் கழகமும் 1946 லேதான் நிறுவப்பட்டது. எல்லாவகை

யான எண்ண எழுச்சிகளுக்கும் மலேசியத் தமிழர்களுக்கு 1946-ஆம் ஆண்டே அடித்தளம் அமைத்தது எனலாம்.

மேற்படி இயக்கங்கள் அமைந்த காலங்களில் அவற்றிற்கு ஏற்பட்ட முட்டுக்கட்டைகள் பெரியவை; மிகப் பெரியவை. எல்லா இடையூறுகளேயும் வென்று இன்று அவை பொலிவோடு நாட்டுக்கும் மக்களுக்கும் நற்பணிகள் ஆற்றுவதை எண்ணியெண்ணி இறும்பூ தெய்துகிறோம்.

நாட்டு விடுதலை

1946-இல் எழுந்த புத்தொளி, நாட்டின் எழுச்சியுணர்வுகளை ஏற்படுத்தியது. அடிமைத்தளை அறுபட வேண்டுமென்ற உரிமை வேட்கை இந்தக் காலக் கட்டத்தில்தான் முகிழ்ந்தது. நாட்டு விடுதலைக்கு முதல் குரல் கொடுத்தது பேரளவு தமிழர்கள் நிறைந்த இயக்கமான மலேசிய இந்தியர் காங்கிரசே என்று எண்ணும் போது நம் நெஞ்சம் விம்புகிறது.

நாட்டு விடுதலைக்கு வித்திட, மலாய்க்காரர்களின் அரசியல் இயக்கமான அம்னோவும், சீனர்களின் இயக்கமான மலேசிய சீனர் சங்கமும், இந்தியர்களின் இயக்கமான மலேசிய இந்தியர் காங்கிரசும் 1954-ல் கூட்டணியாக இணைந்தன. 1955-ல் நடந்த பொதுத் தேர்தலில் மலேசிய இந்திய காங்கிரசும் பங்கு பற்றியது. முதன் முதலில் நாடாளுமன்ற உறுப்பினராகக் கட்சியின் அப்போதைய தேசியத் தலைவர் துன். வீ. தி. சம்பந்தன் தேர்ந்தெடுக்கப்பட்டார். அமைச்சராகவும் பதவியேற்றார். தொடர்ந்து சுதந்திரத் தந்தை துங்கு அப்துல் ரகுமான் அவர்கள் தலைமையில் கூட்டணி ஆற்றிய உறுதி மிக்க பெரும்பணிகளால் 1957-ஆம் ஆண்டு நாடு விடுதலை பெற்றது.

விடுதலைக்குப் பின் :

விடுதலைக்குப் பின் நாட்டில் பெரும் மாறுதல்கள் ஏற்பட்டன. ''பிழைக்க வந்தவர்கள்'' என்ற நிலை மாறி அனைவரும் உரிமை மிக்கக் குடிமக்கள் என்ற நிலை மலரத் தொடங்கியது. குடிஉரிமை வழங்குவதில் அரசு பெரிதும் சலுகை காட்டியது. எதிலும் விழிப்பு மிக்க சீனமக்கள் விரைந்து குடி உரிமை பெற்றார்கள். இந்திய மக்கள்—தமிழ் மக்கள் தயக்கம் காட்டினர். மலேசிய இந்தியர் காங்கிரஸ் மேற்கொண்ட பெருமுயற்சியால் பட்டி தொட்டியெங்கும் குடிஉரிமை பெறுவதன் தேவையை அது தக்க முறைகளில் உணர்த்தியதால் பெரும்பாலோர் குடிஉரிமை பெற்றனர். அப்போது கிடைத்த அரியவாய்ப்பை நழுவ விட்டவர்களில் பலர் இன்றும் கண் கலங்கி நிற்கிறார்கள்.

ஆட்சித் துறையில் :

1955–இல் தமிழர்களில் ஒருவர் மட்டுமே அமைச்சர் பொறுப்பில் இருந்தார். பின்னர் இரண்டு அமைச்சுகள் தரப்பட்டன. இப்போது மாண்புமிகு டான்ஸ்ரீ - டத்தோ வெ. மாணிக்கவாசகம் அவர்கள் மூத்த அமைச்சர்களில் ஒருவராகவும், மாண்புமிகு சி. சுப்பிரமணியம், மாண்புமிகு கு. பத்மநாபன் ஆகியோர் துணை அமைச்சர்களாகவும் பொறுப்பு வகிக்கின்றனர். இவற்ருேடு மாநிலச் சட்ட மன்றங்களில் உறுப்பினர்களாகவும் சட்டமன்ற ஆட்சிக் குழுக்களில் உறுப்பினர் களாகவும் எழுவர் பொறுப்பு வகிக்கின்றனர். நாடாளுமன்ற மேலவை (செனட்) உறுப்பினர்களாக ஆறு பேர் பதவி வகிக்கின்றனர்.

டான் ஸ்ரீ-டத்தோ எஸ். ஒ. கே. உபைதுல்லா அவர்கள் மேலவைத் துணைத்தலைவராக விளங்குகிருர்.

பத்து லட்சம் பேரைக் கொண்ட இந்திய சமூகத்திற்கு நாடாளு மன்றத்திலும், சட்ட மன்றங்களிலும் கிடைத்துள்ள இடங்கள் மிகவும் குறைவே. இக்குறையை நீக்க சமுதாயம் நீண்டகாலமாகவே குரல் எழுப்பி வருகிறது

எதிர்க் கட்சிகளில் :

ஆளுங்கட்சியில் இணைந்து பொறுப்பான பதவிகள் வகிப்ப தோடு, எதிர் கட்சிகளிலும் தமிழர்கள் சிறப்பிடம் பெற்றுள்ளனர். மக்கள் முற்போக்குக் கட்சியின் நிறுவனர்களான வழக்கறிஞர்கள் டி. ஆர். சீனிவாசகம், எஸ். பி. சீனிவாசகம் சகோதரர்கள் இரு வரும் மக்களின் பேராதரவைப் பெற்றவர்களாக விளங்கினுர்கள். இவர்கள் இருவரும் அடுத்தடுத்துக் காலமானதால் கட்சியும் கட்டு டைந்து தளர்ந்தது

எதிர்க் கட்சியில் சிறப்பாகக் குறிப்பிடத் தக்க மற்ருெருவர் திரு வி. டேவிட், இவர் நாடாளுமன்ற உறுப்பினராகவும், சட்ட மன்ற உறுப்பினராகவும் பலமுறை தேர்ந்தெடுக்கப்பட்டார். நாடாளுமன்றத்தில் துணிந்து பேசக் கூடியவர். பெக்கெமாஸ் கட்சியின் வேட்பாளராக 1974–ல் நாடாளுமன்றத்திற்கும், சட்ட மன்றத்திற்கும் போட்டியிட்டு இரண்டிலும் தோல்வி கண்டார். கெராக்கான கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினராக விளங்கி மறைந்த மாண்புமிகு வீரப்பனும், சனநாயகச் செயல் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினராயிருந்த டாக்டர் சூரியனும் அடுத்துக் குறிப்பிடத் தக்கவர்கள் ஆவர்.

அரசாங்கத் துறைகளில் தமிழர் :

அரசாங்கத் துறைகளில் பெரும் பதவிகளில் அதிக அளவு தமிழர்கள் இல்லையென்றாலும் குறிப்பிட்டுச் சொல்லத்தக்க ஒரு சில பெரும் பதவிகளில் தமிழர்கள் பொறுப்பு வகிக்கவே செய்கின்றனர் ஒருலக அவையில் (ஐ.நா)மலேசியாவின் பேராளராகச் சிறப்பாகப் பணியாற்றியுள்ளார், காலஞ்சென்ற வழக்கறிஞர் திரு ரமணி அவர்கள். மலேசியக் கடற்படையின் தலைமைத் தளபதியாகப் பணி யாற்றி அண்மையில் ஓய்வு பெற்றவர் டத்தோ. தனபாலசங்கம் அவர்கள். சட்டத்துறையில் நல்லறிஞராக விளங்கிய காலஞ்சென்ற டான் ஸ்ரீ-டத்தோ ஆதிநாகப்பன் அவர்கள் அமைச்சராகப் பொறுப்பு வகித்ததோடு அரசுத்துறைகளில் பலவகைப் பொறுப்புக் கள் வகித்திருக்கிறார். இப்போது தொழிலாளர் துணை அமைச்ச ரான மாண்புமிகு கு. பத்மநாபன் அவர்கள் சிறந்த பொருளாதார வல்லுநராவார். இவர் பிரதமர் துறையின் தலைமைச் செயலாளராகப் பொறுப்பு வகித்துள்ளார். மலேசிய வானொலியின் முன்னாள் இந்தியப் பகுதித் தலைவரான திரு இரா பாலகிருஷ்ணன் அவர்கள் இப்போது ஒலிபரப்புத் துறையின் இயக்குநராகப் பதவி வகிக்கிறார். காவல் துறைகளில் தமிழர் மதிப்பு மிக்க பொறுப்புக்களில் உள்ளனர். காவல் துறையில் இன்று பெரும் பதவி வகிக்கும் தமிழர் திரு அழகேந்திரா ஆவார். நாட்டுப் பாதுகாப்பிற்கும் கம்யூனிச ஒழிப் பிற்கும் குற்றச் செயல்களைத் தடுப்பதற்கும் பல வீரர்கள் தங்கள் உயிரையும் பணயம் வைத்திருக்கின்றனர் மற்றும் கல்வி ஆராய்ச்சி தேசியக் கப்பல் நிறுவனம், விமானம், தேர்தல் கமிஷன், பொதுச் சேவை குழு (P.S.C.) முதலிய தறைகளிலும் தமிழர்கள் முக்கிய பொறுப்பு வகிக்கிறார்கள்.

விளையாட்டுத் துறை

மலேசியாவில் மிகவும் வேகமாக முன்னேறிவரும் துறைகளில் விளையாட்டுத் துறையும் ஒன்று, விளையாட்டுத் துறையில் தமிழர்கள் பெருமைபடத் தக்க சாதனைகளைப் புரிந்து வருகிறார்கள். 'ஆசியா வின் அதிவேகமனிதர்' என்ற சிறப்புப் பெற்ற டாக்டர் ஜெகதீசன் ஓட்டப்பந்தயத்தில் மலேசியாவின் முடி சூடா மன்னராக விளங்கிய வர். காற்றெனப் பறந்து காண்போரை திகைக்க வைக்கும் வீராங் கனையான இராஜாமணி அம்மையார் ஓட்டப் பந்தயத்தில் பெருஞ் சாதனைகள் புரிந்தவர் இவர்களைத் தொடர்ந்து பலர் இத்துறையில் வளர்ந்து வருகிறார்கள். அகில உலக அரங்குகளில் மலேசியாவின் காற்பந்து விளையாட்டுக் குழுத் தலைவராகப் பொறுப் பேற்று வெற்றிகள் ஈட்டிய திரு. சந்திரன் வளைமட்டைப்பந்து (ஹாக்கி) விளையாட்டுக் குழு வின் தலைமைப் பொறுப்பேற்று உலக அரங்கில் மலேசியாவின் பெரு

மையை உயர்த்திய திரு சண்முகநாதன் ஆகியோரின் தொண்டை நாடு மறக்க முடியாது. பூப்பந்தாட்டத்தில் தேசிய வீரனுகி மிகக் குறைந்த வேறுபாட்டில் உலக வீரனுகும் வாய்ப்பை இழந்த பூப்பந்து வீரர் திரு குணுளன் இப்போது மலேசியாவின் பூப்பந்தாட்டப் பயிற்சி யாளராகப் பணி புரிந்து மலேசியாவின் செல்வாக்கை உயர்த்த முனைந்து வருகிருர். இத்துறையில் விரைந்து முன்னேறி வருகிருர் தேசிய வீரர் திரு ஜேம்ஸ் செல்வராஜ்.

பொருளாதாரத்துறை

எல்லாவற்றுக்கும் அடிப்படையான பொருளாதாரத் துறையில் தமிழர்கள் மிகவும் பின் தங்கியே உள்ளார்கள். மலேசிய இந்தியர் களின் தேசியத் தலைவர் அமைச்சர் மாண்புமிகு டான்—ஸ்ரீ டத்தோ வெ. மாணிக்கவாசகம் அவர்கள், 'புதிய பொருளாதாரக் கொள் கையும் மலேசிய இந்தியர்களும்' என்ற நீலப்புத்தகத்தின் முன்னுரை யில் பின்வருமாறு கூறுகிருர்.

''மலேசிய இந்திய சமுதாயத்தில் ஏறத்தாழப் பாதிப்பேர் தோட் டப் புறத்திலும் சிறு தோட்டங்களிலும் தனித்து விடப்பட்டு விட்டார் கள், இன்னும் ஒரு பெரும் பகுதியினர் நகர்ப்புற வாழ்க்கையின் ஒதுங்கிய பகுதிகளில் வ ழ்ந்து வருகிருர்கள். இதனுல், நாட்டின் முன்னேற்றத்திலும் மாற்றங்களிலும் அவர்கள் பங்கேற்பது பாதிக்கப்பட்டுள்ளது. இதற்கு மேலாக மலேசிய இந்தியர்களின் இளம் தலைமுறையினரின் திறன்கள், வாய்ப்புக்கள் ஆகியவற்றையும் அது பாதித்துள்ளது. இந்த நிலை தொடர அனுமதிக்கப்பட்டால், அஃது இச்சமுதாயத்தின் பெயர், கௌரவம், நல்வாழ்வு ஆகியவற் றைக் கடுமையாகப் பாதித்துவிடும்.''

இவ்வரிகள் மலேசிய இந்தியர்களின் குறிப்பாகத் தமிழர்களின் நிலையை விளக்கப் போதுமானவையாகும். தமிழர்கள் இந்நாட்டில் உழைப்பைக் கொட்டினுர்களேயன்றித் தங்கள் உயர்வைப் பற்றி எண்ணவேயில்லை. 'கறப்பது உழக்குப் பால். உதைப்பதில் பல்லும் வாயும் போகிறது' என்ற பழமொழிக்கொப்ப மாடாக உழைத்துப் பெரும் பொருளையும் சிக்கனமாகச் சேமிக்காமல் ஊதாரித்தனமாகச் செலவிட்டு உருக்குலைந்து போகும் நிலையே தொடர்ந்தது. ஒவ்வோர் ஊரிலும் ஒரு கோயில் இருந்தது போலவே கள்ளுக் கடையும் இருந்தது. கள்ளச் சாராயக் கடைகளும் மூலை முடுக்கெல்லாம் இருந்தன. தமிழர் வருவாய் முழுதும் குடியால் அழிந்ததோடு உடற் செல்வமும் உருகிக் கரைந்தது எத்தனையோ உயிர்கள் கள்ளச் சாராயத்திற்கு இரையாயின. ஈட்டும் வருவாய் போதாமல் நாளும் கடன் சுமை ஏறியது. நலியும் நிலையை மாற்ற நீண்ட நெடுங்காலம் செயலளவில் யாராலும் முயற்சி மேற்கொள்ளப்படவில்லை.

இந்த நிலையில் தோட்டத்துண்டாடல் என்னும் காட்டுதீ பரவித்யது. இந்த வாழ்வு என்றும் நிலையானது என்று இருமாந்திருந்த தமிழர் நெஞ்சில் இடி விழுந்தது. 'துண்டாடல் என்னும்' 'அணுக்குண்டு விழுந்த பின்னர் தான் தமிழர் யார்?' அவர் நிலையென்ன? அவர்களின் எதிர்காலம் என்ன ஆகும்?' என்ற சிந்தனை சமுதாயத்தில் எழுந்தது. சாறெடுக்கப்பட்ட சக்கையெனத் தோட்டப்புறத் தமிழர் புறக்கணிக்கப்பட்ட நிலையைக் கண்டு கலங்கிய உள்ளங்கள் பல. துண்டாடல் கொடுமையைக் கண்டு மனம் உருகி மலேசியத் தமிழ்க் கவிஞர்கள் பாடிய பாடல்கள் பாடுவோரின் கண்களை குளமாக்கும். நெஞ்சை நெக்குருகச் செய்யும் சமுதாயத் தலைவர்கள் பரிவோடு தோட்டத்துண்டாடலை ஒழிக்கப் பெருமுயற்சி மேற்கொண்டார்கள் என்றாலும் சட்டம் இடம் தராத நிலையில் அல்லல்படும் தமிழர்களின் கண்ணீரைத் துடைக்கும் வழியறியாது தவித்தனர்.

தேசிய நில நிதிக் கூட்டுறவுச் சங்கம் :

தமிழர் நெருப்பாற்றில் நீந்த வேண்டிய கொடுமையான நிலை உருவான இந்த நேரத்தில் மலேசிய இந்திய காங்கிரசின் அன்றைய தேசியத் தலைவராயிருந்த துன். சம்பந்தனார் அவர்கள் ஓர் அறிய பொருளாதார இயக்கத்தை ஏற்படுத்தினார்கள்.

1960-ஆம் ஆண்டில் தோற்றுவிக்கப்பட்ட தேசிய நிலநிதிக் கூட்டுறவுச் சங்கமே மலேசிய நாட்டுத் தமிழர்களுக்கு முதன் முதலில் அமைந்த பொருளாதார நிறுவனமாகும். குறைந்த வருவாய் உடையவர்களுக்கேற்ற முறையில் 100 வெள்ளிக்கு ஒரு பங்கு என்ற முறையில், அதையும் மாதம் பத்துப் பத்து வெள்ளியாகச் செலுத்தலாம் என்ற சலுகை முறையை ஏற்படுத்தியதால், ஆயிரக்கணக்கானவர் சங்கத்தில் உறுப்பியம் பெற்றனர். எதுவும் செய்யமுடியாத ஏழைகள் என்று தாழ்வாகக கருதப்பட்ட தோட்டப் புறத் தமிழர்களின் பத்து வெள்ளித் திட்டம் பல தோட்டங்களை வாங்கியது.

தே. தோ. தொ. ச.வின் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம்

இன்று 19 தோட்டங்கள் சொந்தமாகியுள்ளன—துண்டாடல் அரக்கனின் முதுகெலும்பு உடையத் தொடங்கியது. உலகளாவிய புகழ்பெற்ற தேசிய நிலநிதி கூட்டுறவுச் சங்கம் அமைத்தது. சம்பந்தன் கூட்டுறவுத் தந்தை என்ற சிறப்பைப் பெற்றார். கூட்டுறவுச் சங்கத்திற்கு அடுத்தபடியாகப் பாட்டாளிகளை வழி நடத்தும் உலகப் புகழ் பெற்ற மாபெரும் இயக்கமான 'தேசியத் தோட்டத் தொழிலாளர் சங்கம்' ''அலோனியர்னஸ்'' என்ற பொருளாதார நிறுவனத்தைத் தோற்றுவித்ததோடு பலநோக்குக்

கூட்டுறவுச் சங்கத்தையும் ஏற்படுத்தியது தோட்டங்கள் வாங்கப் பட்டதோடு தொழிற்சாலைகளும் நிறுவப்பட்டன. இப்போது கரும்புத் தோட்டம் நிறுவும் திட்டமும் விரைந்து செயற்பட்டு வருகிறது.

நேசா பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம்

பொருளாதார உணர்வு பரவலாக ஏற்பட்ட நேரத்தில் 1974-ஆம் ஆண்டு இந்திய காங்கிரசின் தேசியத் தலைவரான டான் ஸ்ரீ-டத்தோ வெ. மாணிக்கவாசகம் அவர்களால் நேசா பல நோக்குக் கூட் டுறவுச் சங்கம் நிறுவப்பட்டது. தொழில் புரியக் கடன் வழங்கும் திட்டம், டேக்சி சேவை நடத்தும் திட்டம் போன்ற அரிய திட்டங் களை நேசா சிறப்பாகச் செயல்படுத்துகிறது. மேலும், மலேசிய இந்திய காங்கிரசின் உதவித் தலைவர்களில் ஒருவரும், மேலவைத் துணைத்தலைவருமான டான் ஸ்ரீ டத்தோ எஸ. ஓ. கே. உபைதுல்லா அவர்களின் தலைமையில் சிறு தொழில் முதலீட்டு நிறுவனம் அண்மை யில் அமைந்துள்ளது குறைந்த வருவாய் உடையோரை முதலாளி களாக்கும் இத்திட்டம் சிறப்பான அடிப்படைகளோடு செயல்படத் தொடங்கியுள்ளது.

தொழிலாளர் மேம்பாட்டுக் கூட்டுறவுச் சங்கம்

இக்கழகம் இவ்வாண்டு மலேசிய இந்திய காங்கிரசின் துணைத் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான மாண்புமிகு ச. சாமிவேலு அவர்களால் எஸ். எம். எஸ்., ஏ. எம். என். அமைக்கப்பட்டது. இக் கழகம் வீடு கட்டும் திட்டத்தை நாடெங்கும் செயற்படுத்தவுள்ளது. ஏழைத் தமிழர்களுக்குக் குறைந்த விலையில் தரமான வீடுகள் கிடைக்க கூட்டுறவு முறையில் முனைப்போடு செயல்படத் தொடங்கி யுள்ளது.

மாஜு ஜெயா

நாடெங்கும் தமிழ் இளைஞர் மணி மன்றம் என்ற பெயரில் தனித் தனியே செயல்பட்டு வந்த மன்றங்களை ஒன்றிணைத்து 1964-இல் பிணங்கில் அமைந்த தமிழ் இளைஞர் மணி மன்றங்களின் பேரவை, மொழி, கலை, பண்பாட்டுத்துறை வளர்ச்சிக்குப் பெரிதும் தொண் டாற்றியுள்ளது. தமிழர் பொருளாதாரத் துறையில் மேம்பாடு காண வேண்டுமென்ற நோக்கில் இப்பொழுது 'மாஜு ஜெயா' என்ற பெய ரில் ஒரு கூட்டுறவுச் சங்கத்தைக் கண்டுள்ளது.

தோட்டப்புற மக்களுக்கு வீடு கட்டித் தரும் திட்டம்

அரசாங்கமும், தோட்டப்புற மக்களுக்குச் சொந்த வீடு உருவாக் கித் தரும் திட்டத்தைச் செயல்படுத்த முன் வந்துள்ளது. தோட்டப்

புறத்தில் முதலாளிக்குச் சொந்தமான வீட்டிலேயே காலமெல்லாம் வாழாமல் சொந்த வீட்டில் உரிமையோடு வாழ வாய்ப்பளிக்கும் இத் திட்டத்திற்கு அரசாங்கம் ஒரு கோடி சுழல் நிதி ஏற்படுத்தியுள்ளது.

இப்படிப் பல்லாற்ருனும் தமிழர்களின் நிலையை உயர்த்த முயற்சிகள் மேற்கொள்ளப்படுகின்றன. கடந்த பத்தாண்டுகளுக்கு முன்பிருந்த நிலையை எண்ணும்போது இன்றைய தமிழர்களின் எண்ணத்தில் பொருளாதாரச் சிந்தனை பூத்துள்ளதை உணர முடிகிறது என்ருலும், இன்னும் எதிர்பார்க்கும் அளவு வேரோடவில்லையென்றே சொல்ல வேண்டியுள்ளது. அடுத்த பத்தாண்டுகளில் நிலைமை சற்று மேம்பாடு காணுமென்று உறுதியாக நம்பலாம்.

கல்வி

'கண்களுக்கு ஒளி வழங்குவது கல்வி;
செல்வங்களிலேயே அழியாத பெருமை கொண்டது கல்வி.

ஆனல் மலேசியத் தமிழர்களுக்கு குறிப்பாகத் தோட்டப்புறத் தமிழர்களுக்குத் தொடக்கத்தில் காலனித்துவ ஆட்சியில் ஏதோ சில சொற்கள் எழுதப் படிக்கத் தெரிந்தால் போதுமென்ற அடிப்படையிலேயே 'கல்வி' வழங்கப்பட்டது. கோயில்களிலும், குழந்தைப் பாதுகாப்பு நிலையங் களிலும் (ஆயாக் கொட்டகை) மாட்டுத் தொழுவத்தில் கூட வகுப்புக்கள் நடத்தப்பட்டுள்ளன. விடுதலைக்குப் பின் கல்வித்துறை மறுமலர்ச்சியடைந்தது. இரசாக் கல்வித் திட்டம் நடைமுறைக்கு வந்தது. தேசிய அளவில் அனைத்துக் குழந்தைகளும் ஒரே வகையான பாடத்தைப் பயிலும் வாய்ப்புக் கனிந்தது. தமிழ் சீனம் முதலிய தாய்மொழிப் பள்ளிகளும், தேசிய உணர்வோடு சீராக இயங்கத் தொடங்கின.

தமிழர்கள் பெரும்பாலும் தோட்டப் புறங்களில் வாழ்ந்ததால் வசதிகள் நிறைந்த பள்ளிக் கட்டடங்களைத் தமிழ்ப் பள்ளிகள் பெற இயலவில்லை. சிற்சில இடங்களில் மட்டுமே ஒழுங்கான புதிய கட்டடங்கள் எழுந்தன. கூட்டுப் பள்ளிகள் மூலம் சில பள்ளிகள் சீர்திருத்தப்பட்டன. தமிழர்களின் பொருளாதார நிலை பிள்ளைகளுக்குச் சிறப்பாகக் கல்வியை வழங்க உதவவில்லை மேலும், சில பெற்ருேர் ரப்பர்க் காடுகளுக்கும், செம்பனைத் தோட்டங்களுக்கும் தங்களுக்கு உதவியாகப் பிள்ளைகளை அழைத்துச் செல்வதாலும் பல குழந்தைகள் கல்வி பெறும் வாய்ப்பை இழக்கின்றனர். குழந்தைகள் வளரும் சூழ்நிலை, பெற்ருேர்களின் கண்காணிப்பின்மை, ஊட்டச் சத்தின்மையால் உடல் வளம் குன்றிய பிள்ளைகளின் இரங்கத்தக்க

நிலை, மேலும் எழுத்தில் வடித்துக்காட்ட இயலாத வேறு சில முட்டுக் கட்டைகளும் தமிழ்க் குழந்தைகளின் கல்வியைப் பாதிக்கின்றன. தமிழ்ப் பள்ளிகளில் பயிலும் குழந்தைகள் மட்டுமின்றித் தேசியப் பள்ளிகளில் பயிலும் பிள்ளைகளுக்கும் மேற்காணும் இடையூறுகள் உண்டு. இன்று மலேசியாவில் அறுநூற்றுக்கு மேற்பட்ட தமிழ்ப் பள்ளிகள் உள்ளன. எண்பத்தைந்தாயிரத்திற்கு மேற்பட்ட குழந்தை கள் தமிழ்ப் பள்ளிகளில் பயில்கின்றனர். ஏறக்குறைய இதே எண்ணிக்கையுடைய பிள்ளைகள் தேசியப் பள்ளிகளில் பயில்கிறார் கள். தேசியப் பள்ளிகளில் பயிலும் குழந்தைகளுக்கும் தாய்மொழி பயில வாய்ப்புண்டு. 15 குழந்தைகள் விரும்பிக் கேட்டால் தாய் மொழிப் பயிற்சிக்கு வழிவகை செய்யப்படுகிறது. பல பள்ளிகள் பெற் றோரின் விருப்பத்தைக் கேட்பதில்லை. பெற்றோர்களில் சிலர் தாய் மொழிப் பயிற்சியைப் பற்றிக் கவலைப்படுவதில்லை.

இடைநிலைப் பள்ளிகளில்

தாய்மொழிப் பள்ளிகள் 6-ஆம் வகுப்புடன் நிறைவுறுகின்றன. பின்னர் இடைநிலைப் பள்ளிகளில் ஆங்கிலமொழி தவிர்த்த அனைத்துப் பாடங்களும் தேசிய மொழியிலேயே நடத்தப்படுகின்றன. இங்கும் பதினைந்து மாணவர்கள் விரும்பினால் தமிழ் பயிலலாம். என்றாலும், பெரும்பாலான பள்ளிகளில் தமிழ்ப்பாடம் ஒழுங்காக நடத்தப்படுவ தில்லை. இதனால் பல்கலைக்கழகம் செல்லும் மாணவர்கள் அங்குத் தமிழ்ப்பாடம் எடுத்துப் படிப்பதில் பெரிதும் துன்புறுகின்றனர்.

கல்வியும் மொழியும்

''கல்வி எந்த மொழியிலும் இருக்கலாம்; தாய்மொழியில்தான் பெறவேண்டுமென்பதில்லை; தாய்மொழிப் பள்ளிகளில் மொழிப் பாடத்தைத் தவிர மற்றெல்லாப் பாடங்களும் தேசிய மொழியிலேயே இருந்தால் நம் மாணவர்கள் விரைந்து முன்னேறி விடுவார்கள்'' என்று ஒரு சாரார் கூறுகின்றனர். ''தொடக்கக் கல்வி தாய்மொழி யில் பெறுவதே இயற்கையானது; தாய்மொழிப் பள்ளிகளில் தேசிய மொழி ஆங்கிலம் தவிர்த்த அனைத்துப் பாடங்களும் தாய் மொழி யிலேயே நடைபெற வேண்டுமென்றும் இப்போதுள்ள முட்டுக் கட்டைகளை அகற்றினால், தாய்மொழிப் பள்ளிகளில் பயிலும் குழந்தைகள் முன்னேற்றம் காண்பதில் எந்தத் தடையும் இருக்க முடியாது என்றும் மற்றொரு சாரார் வாதிடுகின்றனர். சொந்த மொழி கலை, நாகரிகம், பண்பாடுகள் அழியாமல் காக்க—தமிழர் என்ற மர புணர்வு மாறாமல் வாழத் தாய்மொழிப் பள்ளிகளில் தாய்மொழியே

பயிற்று மொழியாகத் தொடரவேண்டுமென்று மற்றொரு சாரார் வாதிடுகின்றனர்

தமிழ் இலக்கியக் கழகம்:

தமிழ்ப் பள்ளிகள் நிலைத்து இயங்க வேண்டுமென்பதில் தமிழ்த்திரு இர. ந. வீரப்பன் அவர்களின் உறுதிமிக்கத் தலைமையில் இயங்கும் தமிழ் இலக்கியக் கழகம் பெரிதும் ஆர்வங்கொண்டு பாடு பட்டு வருகிறது கல்வி வளர்ச்சி மாநாடுகள் கூட்டி சமுதாயத்தின் உணர்வுகளை அரசுக்கு உணர்த்தி வருகிறது. மலேசிய அரசாங்கத் திற்குத் தாய்மொழிப் பள்ளிகளைத் தேசியப் பள்ளிகளாக மாற்றும் எண்ணம் இல்லை.

கல்வி உதவி நிதிகள்:

உயர் கல்வி பெற விரும்பும் அனைத்து ஏழை மாணவர்களுக்கும் நிதி உதவி கிடைக்க வாய்ப்பில்லை என்றாலும், தென்னிந்திய தொழி லாளர் நிதி, மலேசிய இந்தியர் காங்கிரசின் கல்வி நிதி, டாக்டர் இராம சுப்பையா கல்வி நிதி முதலியவற்றின் மூலமும், தேசிய நில நிதிக் கூட்டுறவுச் சங்கம், அருள்மிகு மகாமாரியம்மன் கோயில் தேவஸ்தானம், தேசியத் தோட்டத் தொழிலாளர் சங்கம் முதலியவை வழங்கும் கல்வி உதவி நிதி மூலம் ஆண்டுதோறும் பல மாணவர்கள் உயர் கல்வி பெற்று வருகிறார்கள். உயர் கல்வி நிலையங்களில் தமிழ் மாணவர்களுக்கும் போதிய இடங்கள் தரப்படுவதில்லை என்ற மனக் குறை தொடர்ந்து இருந்து வருகிறது. இந்நிலை மாற சமுதாயம் குரல் எழுப்பி வருகிறது.

இலக்கிய வளர்ச்சி:

மலேசியாவில் தமிழ் இலக்கிய வளர்ச்சி நெடுங்காலத்திற்கு முன்பே அரும்பத் தொடங்கியது 1880–க்கு முன்பே இங்கு நூற்கள் வெளியிடப்பட்டுள்ளன. இதுவரை ஏறக்குறைய ஐந்நூறு நூற்கள் வெளிவந்துள்ளன. நூறு ஆண்டுகளுக்கு முன்பே இங்கு இலக்கியம் அரும்பத் தொடங்கியதென்றாலும் கடந்த கால் நூற்றாண்டுக்கால வளர்ச்சியே சிறப்பாகக் கொள்ளத்தக்கதாகும்'

மலேசிய இலக்கிய வளர்ச்சிக்குத் தாளிகைகள் பேரளவு, துணை புரிந்துள்ளன என்பது இங்குக் குறிப்பிடத்தக்கது. பொன்விழாவைத் தாண்டி மணிவிழாவை நோக்கி நடைபோட்டுக் கொண்டிருக்கும் தமிழ் நேசனும் இடைவிடாது எழுச்சிக்கு முரசொலிக்கும் தமிழ் முரசும், உலகிலேயே மாற்றச்சு (ஆஃப்செட்) வசதியோடு வெளி வரும் ஒரே தமிழ் ஏடான தமிழ் மலரும், சில காலம் சீரான பணி

நூல் வெளியீடு:

மலேசியாவில் முறையான தமிழ் இலக்கிய வளர்ச்சி கால் நூற்றுண்டுக்கு முன்புதான் தொடங்கியதென்றுலும் கடந்த பத்துப் பதினைந்து ஆண்டுகளில்தான் எழுத்துக்கள் நூல்வடிவம் பெறத் தொடங்கின. இதழ்களில் காலையில் வெளிவந்து மாலையில் குப்பைத் தொட்டிகளில் விழும் நிலை மாறி நூலாக்க முயற்சிகள் அரும்பியுள்ள இன்றைய கால கட்டத்தை மலேசியத் தமிழ் இலக்கிய உலகின் பொற்காலம் எனலாம்.

தமிழ் எழுத்துத்துறை வளர்ச்சிக்கு தொலைக்காட்சித் துறையில் வாய்ப்பில்லை. ஊதியம் ஏதுமின்றி எழுத்துக்களை இதழ்களுக்குச் சொந்தச் செலவில் அனுப்பி, அதுவே தமிழ்ப்பணி என்று நிறைவுறும் எழுத்தாளர்களுக்கு வானொலி ஓரளவு ஊதியம் தந்து ஊக்கி வருகிறது. அரசு வெளியீடான உதயமும் நிறைவடையத்தக்க ஊதியத்தை எழுத்தாளர்களுக்கு வழங்குகிறது.

பன்னெடுங்காலம் ஊதியம் எதையும் எதிர்பார்க்காமல் எழுதிக் கொண்டிருந்த எழுத்தாளர்களுக்கு, தாளிகைகள் அவ்வப்போது சிறு சிறு அளவில் பரிசுகள் வழங்கின. தொடர்ந்து முறையான ஓர் ஊதியத் திட்டத்தை எந்த இதழும் மேற்கொள்ளவில்லை. மலேசியத் தமிழ் எழுத்தாளர் சங்கம், மாதாந்தரச் சிறுகதைக் கருத்தரங்குகள் நடத்தித் தேர்ந்தெடுக்கப்படும் ஒரு சிறு கதைக்கு ஐம்பது வெள்ளி பரிசளித்து வருகிறது.

மலேசிய இந்திய காங்கிரசுவின் இலக்கியப் பரிசுத் திட்டம்

இப்போது மலேசிய இந்தியர்களைப் பேராளுகின்ற (பிரதிநிதிக்கின்ற) அரசியல் கட்சியான மலேசிய இந்தியர் காங்கிரசு மிகப் பெரிய அளவிலான பரிசுத் திட்டம் ஒன்றை அறிவித்துள்ளது கலாசாரப் பகுதியில் தலைவராக அண்மையில் பொறுப்பேற்றுள்ள திரு வ. கோவிந்தராஜ் ஏ. எம். என்.,பி. ஜே. கே. அவர்களின் அறிக்கையின்படி ஆண்டுதோறும் வெளிவரும் சிறந்த ஒன்றுக்கு ஆயிரம் வெள்ளியும், இரண்டாம் நிலை பெறும் நூலுக்கு ஐந்நூறு வெள்ளியும் அளிப்பதே அத்திட்டமாகும். இதுநாள்வரை மலேசியாவில் எந்த அமைப்பும் மேற்கொள்ளாத மாபெரும் திட்டம், இது எழுத்தாளர்களுக்குப் பேருக்கம் தரும் இப்பரிசுத் திட்டம் தொடர்ந்து உறுதியாகச் செயல்பட வேண்டுமென்று இலக்கிய உலகம் ஆர்வமுடன் எதிர் பார்க்கிறது.

மலேசியத் தமிழ் எழுத்தாளர் சங்கம்

மலேசியாவில் தமிழ் இலக்கிய வளர்ச்சியைப் பற்றிக் குறிப்பிடும் போது எழுத்தாளர் சங்கம் பற்றிக் குறிப்பிட வேண்டுவது அவசிய மாகும். எழுத்தாளர்களை ஒன்று சேர்க்கவும், அவர்களின் இலக்கிய முயற்சிகளைத் தூண்டவும், சங்கம் தொடக்கம் முதல் பாடுபட்டு வரு கிறது. பல நூற்களையும், சங்கம் வெளியிட்டு வருகிறது தேசிய மொழி எழுத்தாளர்களுக்கு ஆண்டுதோறும் பரிசு தந்து ஊக்குவது போல் தாய்மொழி எழுத்தாளர்களுக்கும் இலக்கியப் பரிசுகள் தர வேண்டுமென்று சங்கம் வேண்டுகோள் விடுத்து வருகிறது. இப் பணியில் தமிழ் இலக்கியக் கழகம் மேற்கொள்ளும் முயற்சிகளும் குறிப்பிடத்தக்கவை. தேசியமொழியான மலேசிய மொழியில் அமைவதே தேசிய இலக்கியம் ஆதலால், அம்மொழியில் எழுதப் படும் நூற்களையே பரிசு திட்டத்தில் சேர்க்க முடியும் என்ற நிலை யுள்ளது. "தாய்மொழிகளில் எழுதப்படும் இலக்கியங்களும் தேசிய உணர்வு உடையவை. அவற்றிற்கும் பரிசு தரப்படவேண்டு" மென்ற கோரிக்கை தொடர்ந்து எழுப்பப்பட்டு வருகிறது. எழுத்தாளர் சங்கத்தை எண்ணும்போது காலஞ்சென்ற பெருமகன் திரு சி. வி. குப்புசாமி, கவிஞர் சி. வேலுசாமி, சிறுகதைச் செல்வர் திரு. சி, வடிவேல், முத்தமிழ் வித்தகர் திருமுருகு சுப்பிரமணியன் முதலியோர் ஆற்றிய பணிகள் நம் நினைவுக்கு வருகின்றன. இப்போது திரு மு. துரைராஜ் அவர்கள் தலைவராகவும் திரு பீர் முகமது செயலாளராக வும் பொறுப்பேற்றுள்ளார்கள்.

செந்தமிழ்க் கலா நிலையம்

தமிழ் இலக்கிய வளர்ச்சியைப் பற்றிக் குறிப்பிடும்போது பினாங் கில் பல்கலைச் செல்வரான முதுதமிழ்ப்பெரும் புலவர் சுவாமி இராம தாசர் அவர்கள் தலைமையில் கடந்த 40 ஆண்டுகளுக்கு மேலாக இயங்கிவரும் செந்தமிழ்க் கலா நிலையத்தை மறந்துவிட முடியாது. தரமான புலவர் பலரை இந்நிலையம் உருவாக்கியுள்ளது.

வளர்ச்சி கண்டுள்ள இலக்கியத் துறைகள்

மலேசியத் தமிழ் இலக்கியத் துறையில் குறிப்பிட்டுச் சொல்லத் தக்க அளவு வளர்ந்துள்ள துறைகள் சிறுகதையும் கவிதையும் ஆகும். புதினத்துறை வளர்கிறது என்றாலும் இன்னும் முழுவதும் பெறவில்லை. கட்டுரைத்துறை மந்த நிலையிலேயே உள்ளது என்று தான் சொல்ல வேண்டும். சிறுவர் இலக்கியத்தைப் பொறுத்தவரை கவிதைத்துறை வளர்ச்சி கண்டுள்ளது. கதை, நாடகம், புதினத் துறைகள் நிறைவு கொள்ளத் தக்க அளவு வளர்ச்சி காணவில்லை யென்றே சொல்லவேண்டும். நம் இலக்கிய வடிவங்கள் இப்போது

தேசிய மொழியான மலேசிய மொழியிலும் வெளிவரத் தொடங்கி யுள்ளன. நூற்றுக்கணக்கான கதைகளையும், கவிதைகளையும் மொழிபெயர்த்துள்ள மலேசிய மொழிப் புலவர் திரு ஜி. சூசை அவர் கள் 'உலக மறையான' திருக்குறளை மலேசிய மொழியில் பெயர்த் துள்ளார். அந்நூல் இம்மாநாட்டில் அரங்கேறவிருப்பது குறிப்பிடத் தக்கது.

கலை, பண்பாட்டுத்துறை:

மேலை நாட்டுப் பண்பும் கீழை நாட்டுப் பண்பும் கைகோத்து நடம் புரியும் பச்சைப் பசுங்கோயிலான பண்ணை மலேசியத் திருநாட்டில், கீழை நாட்டுப் பண்பே தலை நிமிர்ந்து அரசோச்சுகிறது. மலாய்க்காரர் களின் பண்பாடு, பழக்க வழக்கங்கள் நம்முறைக்கு அதிக வேறுபாடு கள் கொண்டவை அல்ல. ஆதலால், நம் 'பண்பாடு' ஒன்றிக் கட்டை நிலையில் ஒதுங்கித் தனிமைப்பட வேண்டிய நிலையில்லை. புதிதாக வீசுகின்ற நாகரீகக் காற்று நம் பண்பாட்டை அழித்து விடுமோ என்று அஞ்சத் தேவையுமில்லை. நம்முடைய பாரம்பரியப் பண்பாடுகள் உணர்வுகளோடு ஒன்றி ஒளி விட்டே வருகின்றன. மலேசியாவில் இயங்கும் ஒவ்வொரு தமிழர் அமைப்பும் கலை, பண் பாட்டு வளர்ச்சியில் நாட்டம் கொண்டு உழைத்து வருகின்றன. கலையைப் பொறுத்தவரை இங்குப் பேரார்வம் கரைபுரண்ட நிலையில் இருக்கிறதென்றாலும், எப்படி இங்கு ஒருவர் எழுத்தையே தொழி லாகக் கொண்டு வாழ முடியாதோ அதேபோல் கலையைத் தொழி லாகக் கொண்டும் வாழ முடியாது. தொலைக்காட்சி வானொலித் துறை யைச் சேர்ந்த கலைஞர்களும், நடன இசையாசிரியர்களும் விரல் விட்டு எண்ணத் தக்கவர்களே கலையைத் தொழிலாகக் கொண்டு வாழ்கிறார் கள். கலை நிகழ்ச்சிகள் இங்கு அடிக்கடி நடைபெற்றே வருகின்றன. தனி கர்நாடக (பழம் இசை) இசையரங்கு, தனி பரத நாட்டிய இசை யரங்கு போன்ற ஆழமான கலைப் படைப்புகள் இங்கு நடப்பது அரு மையாகவே உள்ளன. தமிழகத்திதிலிருந்து வரும் பெருங்கலைஞன் களின் படைப்புக்கள் இங்கு இடம் பெறுவதுண்டு. சிறந்த முழு நேர நாடகங்கள் அவ்வப்போது நடப்பதுண்டு. காலஞ் சென்ற நாடகத் தந்தை ஆழி-அருள்தாசன் அவர்கள் ஆண்டுக்கொரு புது நாடகம் என்ற முறையில் பல அரிய நாடகங்களை அரங்கேற்றிப் பெரும் வெற்றிகளை ஈட்டியுள்ளார். அவர் மறைவு மலேசியக் கலை உல கிற்குப் பேரிழப்பாகும். திரு வ. கோவிந்தராஜ் அவர்கள் தலைமை யில் உள்ள கோலாலம்பூர் வளரும் கலைஞர்கள் நாடக மன்றமும் '1941' போன்ற அரிய வரலாற்று நாடகங்களை நடத்தி வெற்றி கண் டுள்ளது. குறிப்பிட்டுச் சொல்லத் தக்க வேறு சில மன்றங்களும் அவ்வப்போது நாடகங்களை நடத்தி வருகின்றன.

இசை, நடனம் முதலிய கலைகளை முறையாகப் பயிற்றுவிக்கப் பெரிய அளவில் இங்கு நிலையங்கள் இல்லை. சிறு சிறு அளவில் ஆங்காங்கே சிலர் இத்துறைகளில் தொண்டாற்றி வருகிறார்கள்.

தேசிய கலாசாரம்

பல இனத்தினர் வாழும் மலேசிய நாட்டில் இப்போது தேசியக் கலாசாரம் ஒன்று உருவாக்கப்பட வேண்டுமென்ற விழைவு அரும்பியுள்ளது. அதற்காக அமைக்கப்பட்டுள்ள குழுவில் மலேசிய இந்தியர் காங்கிரசின் தேசியத் துணைத் தலைவர் மாண்புமிகு ச. சாமிவேலு அவர்களும், தமிழ் இளைஞர் மணி மன்றங்களின் தேசியப் பேரவைத் தலைவர் திரு க. கிருஷ்ணசாமி அவர்களும் இடம் பெற்றுள்ளனர். தேசியக் கலாசாரம் உருவாக வேண்டுமென்ற ஆர்வம் முகிழ்த்துள்ளதேயன்றி அது எப்படி அமைய வேண்டுமென்ற வரையறை இன்னும் ஏற்படவில்லை. காலமே இதற்கு ஒரு நல்ல வடிவை ஏற்படுத்த முடியும்.

வழிபாட்டுரிமை

மலேசியாவில் வாழும் அனைவர்க்கும் வழிபாட்டுரிமை குறைவின்றி வழங்கப்பட்டுள்ளது. தமிழர் பல சமயங்களைத் தழுவுபவர்களாக இருந்தாலும்‘ ‘இந்து’ மதத்தைத் தழுவுவோரே மிக அதிகம். இங்கு இந்து சமயச் சங்கம் ஒன்று வலிமையோடு இயங்குகிறது. கோலாலம்பூர் அருள்மிகு மகா மாரியம்மன் கோவில் தேவஸ்தானமும் சீரிய முறையில் சமயத் தொண்டாற்றுகின்றது. ஆண்டு தோறும் பத்து மலையில் தைப்பூச விழா மிகப் பெரிய அளவில் கொண்டாடப்படுகிறது. இந்த விழாவில் நாடெங்கிலிமிருந்து இலட்சக் கணக்கான தமிழர்கள் ஒரே நேரத்தில் ஒன்று கூடுவதைக் காணலாம். இங்கு ஒவ்வொரு சமய விழாவும் வேறுபாடுகள் இல்லாமல் தேசிய விழாவைப் போலவே நடைபெறும். சமய வேறுபாடுகளை யாரும் போற்றுவதில்லை. தமிழர் வாழும் ஊர் தோறும் கோயில்கள் உண்டு. கோயில் கட்ட அரசு மானியம் வழங்குகிறது.

மறைந்தும் மறையாத மாமணி

மலேசியாவில் தமிழ், தமிழ் உணர்ச்சி, தமிழ் வளர்ச்சி, இலக்கிய எழுச்சி என்று எண்ணும் போதுநம் நினைவில் எழும் பேருருவம் தமிழவேள் கோ. சாரங்கபாணியாவார். தமிழர்க்கு விழிப்பூட்டி பட்டி தொட்டியெங்கும் தமிழ் முழக்கம் செய்த அரிமாவான அவர் தமிழ் முரசு மூலம் ஆற்றிய மணிகள் வரலாற்றில் நின்று நிலைக்கத் தக்கவை. தமிழர் திருநாள் மூலம் அவர் ஏற்றிய தமிழ் உணர்வும்,

பண்பாட்டுணர்வும் தமிழர் தலை நிமிர, பல்கலைக் கழகத்தில் தமிழ் ஒலிக்க வழி வகைகள் செய்ததென்றால் மிகையாகாது.

தேசியக் கோட்பாடுகள்:

1. இறைவன் மீது நம்பிக்கை வைத்தல்
2. பேரரசருக்கும் நாட்டுக்கும் விசுவாசம் செலுத்துதல்
3. அரசியல் அமைப்புச் சட்டத்தை உறுதியாகக் கடைப் பிடித்தல்
4. சட்ட முறைப்படி ஆட்சி நடத்துதல்
5 நன்னடத்தையும் ஒழுக்கத்தையும் பேணுதல்.

இந்த ஐந்து கோட்பாடுகளே மலேசியத் திருநாட்டின் உயிர் மூச்சாகும். நாட்டின் ஒவ்வொரு குடிமகனும் ஏற்றுக் கொண்ட இக் கொள்கைகளே நாட்டில் உரமூட்டுகின்றன; உறுதி ஏற்றுகின்றன; ஒளி வழங்குகின்றன. நம்பிக்கையை ஏற்படுத்து கின்றன.

நாட்டுப்பற்றும், வேற்றுமையில் ஒற்றுமை காணும் ஒருமைப் பாட்டுணர்வும் நாட்டிற்காகத் தன்னையே ஒப்படைக்கத் தயங்காத தியாக மனப்பான்மையும் கொண்டு நம்பிக்கைக்குரிய இனமாகத் தமிழ் இனம் மலேசியாவில் வாழ்கிறது. உலகின் மற்ற எந்த நாட்டுத் தமிழர்களையும் விட மகிழ்ச்சியோடும் நலத்தோடும் வாழ்வோர் மலேசியத் தமிழர்களே என்று இவ்வரங்கில் நெஞ்சு நிமிர்ந்து கூறுவேன்.

''பச்சைப் பசுங்கோயில்—இன்பப் பண்ணை மலை நாடு'' என்று பாவலர்கள் வாழ்த்தும் மலேசியத்தை வாழ்த்தி நாட்டால் பிரிந்திருந் தாலும் நம்மையெல்லாம் ஓரரங்கில் கூட்டும் நற்றமிழை வாழ்த்தி, என் கட்டுரையை முடிக்கிறேன்.

பைந்தமிழ்ப் பண்பாடுமிக்க உலகத் தமிழர்களையெல்லாம் வரவேற்று இவ்வரிய மாநாட்டைக் கூட்டிய தமிழ் நிலத்திற்குத் தலை தாழ்த்தி என் நன்றியைக் கூறிக் கொள்கிறேன்.

'எல்லாரும் இன்புற்று இருக்க நினைப்பதுவே
அல்லாமல் வேறொன்றும் அறியேன் பராபரமே'

—தாயுமானவர்

வணக்கம்

அச்சிட்டு வழங்கியவர்
தமிழ்த்திரு. மணவை முஸ்தபா அவர்கள்.
உலகத் தமிழாராய்ச்சி மன்ற இணைச்செயலாளர்;
(International Association of Tamil Resarch)
நிர்வாக ஆசிரியர், யுனெஸ்கோ கூரியர் (தமிழ்)